தினமணி

**வேளாண் அறிவியல் நிலையத்தில் நாற்றங்கால் தொழில்நுட்பம் குறித்த பயிற்சி நாளை தொடக்கம்**

First Published : 15 Aug 2010 12:09:49 PM IST

திருச்சி, ஆக. 14: திருச்சி அருகேயுள்ள சிறுகமணியில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் நாற்றங்கால் தொழில்நுட்பம் குறித்த பயிற்சி திங்கள்கிழமை (ஆக. 16) தொடங்கப்படவுள்ளது.

இதுகுறித்து அறிவியல் நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் சு. ஈஸ்வரன் தெரிவித்திருப்பது:

விவசாயிகள் தங்களுக்குத் தேவையான நாற்றுகளை தாங்களே உற்பத்தி செய்யும் வகையிலும், நாற்றங்காலின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையிலும் சிறுகமணி வேளாண் அறிவியல் நிலையத்தில் ஆக. 16-ம் தேதி முதல் 20-ம் தேதி வரை நாற்றங்கால் தொழில்நுட்பம் குறித்த பயிற்சி அளிக்கப்படவுள்ளது. வேளாண் தொழில்முனைவோருக்குத் தேவையான தொழில்நுட்பங்களைப் பயிற்சியில் விளக்குவதுடன், வணிக ரீதியில் நாற்றுப் பண்ணையை நிர்வகிக்கும் முறைகளும் பயிற்சியில் எடுத்துரைக்கப்படும்.

பயிற்சியின் போது, ஒவ்வொரு தோட்டக்கலைப் பயிருக்கும் ஏற்ற இனப்பெருக்க முறைகள், ஒட்டுக்கட்டுவதற்கு ஏற்ற வேர்ச் செடிகள், ஒட்டுக்கட்டும் முறைகள், விதை உற்பத்தி நுட்பங்கள் ஆகியவை குறித்து தெளிவாக எடுத்துரைக்கப்படும். இந்தப் பயிற்சியில் கலந்து கொள்ள விருப்பமுள்ள விவசாயிகள், சிறுகமணி வேளாண் அறிவியல் நிலையத்தை நேரிலோ அல்லது 0431- 2614417 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம் என்றார் ஈஸ்வரன்.

**பயிர் மகசூல் போட்டித் திட்டம்**

First Published : 15 Aug 2010 11:45:50 AM IST

திண்டுக்கல், ஆக. 14: வடமதுரை வட்டாரத்தில் பயிர் மகசூல் போட்டித் திட்டத்தை முன்னிட்டு அறுவடைக்கு முன் விளைச்சல் குறித்து வேளாண் துறை அலுவலர்கள் ஆய்வு நடத்தினர்.

வடமதுரை ஊராட்சி ஒன்றியம் வேளாண் உதவி இயக்குநர் அலுவலகம் மூலம் பயிர் மகசூல் போட்டி அறிவிக்கப்பட்டிருந்தது.

இதன்படி சித்துவார்பட்டி கிராம விவசாயி ரா.நாகேந்திரன் என்பவரது தோட்டத்தில் சாகுபடி செய்திருந்த கம்பு உயர் விளைச்சல் ரகத்தினை வேளாண் துறை அலுவலர்கள் கே.பி.

கொண்டாஞ்செட்டி, எம்.பகவதி, தியாகராஜன், துணை வேளாண்மை இயக்குநர் (மாநிலத் திட்டம்) மு.தெய்வேந்திரன் ஆகிய நடுவர் குழுவினர் வெள்ளிக்கிழமை ஆய்வு செய்தனர்.
பின்னர் இவர்களது முன்னிலையில் அறுவடை செய்யப்பட்டது.

மாவட்ட அளவில் பயிர் மகசூல் போட்டியில் பங்கு கொள்ளும் அனைத்து திடல்களும் அறுவடை நிறைவு செய்யப்பட்டவுடன் அதிக மகசூல் பெற்ற விவசாயிக்கான பரிசு வழங்கப்படும் என வடமதுரை வேளாண் உதவி இயக்குநர் பெ.பாஸ்கரன் தெரிவித்தார்.

**துல்லியப் பண்ணையம் அமைக்க மானியம் ஒதுக்கீடு**

First Published : 15 Aug 2010 11:49:53 AM IST

காரைக்குடி, ஆக.14: சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அருகே சாக்கோட்டை வட்டாரத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் துல்லியப் பண்ணையம் அமைக்க மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வேளாண்மை உதவி இயக்குநர் க.கண்ணன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

துல்லியப் பண்ணையம் அமைக்க கரும்பு, நிலக்கடலை, மக்காச் சோளம் பயிரிடும் விவசாயிகள் துல்லியப் பண்ணையம் அமைக்க குறைந்தது 1 ஹக்டேர் நிலமும், தண்ணீர் வசதியும் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

சொட்டுநீர்ப் பாசனம் அமைப்பதற்கு | 11,200 மற்றும் | 7,500 மானிய விலையில் திரவ நிலை உரங்களும் வழங்கப்படுகிறது.

ஆர்வமுள்ள விவசாயிகள் சம்பதப்பட்ட வேளாண் அலுவலர்களைச் சந்தித்துப் பதிவு செய்து பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தினமலர்

**செடிகள் விற்பனைக்கு தயார் தோட்டக்கலை அலுவலர் தகவல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 16,2010,01:53 IST

காஞ்சிபுரம் : காஞ்சிபுரம் அருகே அமைந்துள்ள அரசு தோட்டக்கலை பண்ணைகளில் தோட்டக்கலை செடிகள் விற்பனைக்கு தயாராக உள்ளதென, தோட்டக்கலை அலுவலர் சக்கரவர்த்தி தெரிவித்துள்ளார். அவரது அறிக்கை விவரமானது, காஞ்சிபுரம் அடுத்த மேல்ஒட்டிவாக்கம், மேல்கதிர்பூர் அரசு தோட்டக்கலை பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட

தோட்டக்கலை செடிகள் விற்பனைக்கு தயாராக உள்ளன. நல்ல தரமான மற்றும் உயர் விளைச்சல் தரக்கூடிய ரகங்களான மா, சப்போட்டா ஒட்டுச் செடி, கொய்யா பதியன், பலா, எலுமிச்சை, நெல்லி பழச்செடிகள், மல்லிகை, முல்லை போன்ற பூச்செடிகள், கறிவேப்பிலை, தேக்கு, இலவன் போன்ற பொருளாதார செடிகள் பண்ணையில் நேரடி விற்பனைக்கு தயாராக உள்ளது. விவசாயிகள் தற்போதைய பருவ நிலையையும், பருவ மழையையும் பயன்படுத்தி தேவையான செடிகளை பண்ணைகளில் வாங்கி நடவு செய்து அதிக வருவாய் ஈட்டி, பயன் பெற வேண்டும். இவ்வாறு சக்கரவர்த்தி தெரிவித்துள்ளார்.

**விவசாய கருவிகளுக்கு மானியம் விண்ணப்பிக்க கலெக்டர் அழைப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 16,2010,01:14 IST

பெரம்பலூர்: தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டத்தின்கீழ் வேளாண்மை பொறியியல் துறை மூலம் விவசாய கருவிகளுக்கு மானியம் பெற பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட கலெக்டர் விஜயகுமார் தெரிவித்துள்ளார்:அவர் வெளியிட்ட அறிக்கை:பெரம்பலூர் மாவட்டத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின்கீழ் வேளாண்மை பொறியியல் துறை மூலம் 2010-2011ம் ஆண்டுக்கு பல தானிய கதிரடிக்கும் இயந்திரம், இயந்திர தி மூலம் களை எடுக்கும் கருவி, பவர் ஸ்பிரேயர், கைத்தெளிப்பான், பவர் டில்லர், ரோட்டவேட்டர், நெல் அறுவடை மற்றும் கதிரடிக்கும் இயந்திரம், லேசர் கருவி பொருத்தப்பட்ட நிலம் சமன் செய்யும் கருவி, நெல் நடவு இயந்திரம், நெல் நாற்று தயாரிக்கும் இயந்திரம் ஆகியவை மான்யத்தில் வழங்கப்பட உள்ளது.
கருவிகள் தேவைப்படும் விவசாயிகள் உதவி செயற்பொறியாளர் வேளாண் பொறியியல் துறை அலுவலகம் 158, புதுகாலனி வடக்குத்தெரு துறைமங்கலம், பெரம்பலூர் என்ற முகவரியில் உள்ள அலுவலகத்தில் விண்ணப்பிக்க வேண்டும். முன்னுரிமையின் அடிப்படையில்தான் கருவிகளுக்கான மான்யம் வழங்கப்படும். தேர்வு பெறும் விவசாயிகள் மான்யம் போக மீதி தொகையை பேங்க் டி.டி., மூலம் செலுத்தி கருவியை பெற்று கொள்ளலாம்.

**மானிய விலையில் டிராக்டர்வழங்கும் திட்டம் அறிமுகம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 16,2010,00:52 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் டிராக்டர் உள்ளிட்ட இயந்திரங்கள் வழங்கப்பட உள்ளது.

மாவட்ட வேளாண்மை துறை இயக்குனர் வெளியிட்ட அறிக்கை:தர்மபுரி மாவட்டத்தில் பேரியல் மேலாண்மை திட்டத்தின் கீழ், வேளாண்மையை இயந்திர மயமாக்கும் வகையில் வோளாண் உற்பத்தியை அதிகப்படுத்தவும், உற்பத்தி செலவை குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி விவசாயிகளுக்கு பவர்டில்லர், டிராக்டர் மற்றும் ரோட்டா வேட்டர்கள் போன்ற கருவிகள் மானிய விலையில் வழங்கப்பட உள்ளது.பவர் டில்லர் மற்றும் ரோட்டா வேட்டர் இயந்திரங்கள் வாங்கும் விவசாயிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட விலையில் மானியமாக 40 சதவீதம் வழங்கப்படுகிறது. டிராக்டர் வாங்கும் விவசாயிகளுக்கு 25 சதவீதம் அல்லது 45 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.பேரியல் மேலாண்மை திட்டம் மூலம் மாவட்டத்தில் 2010-11ம் ஆண்டில் 10 பவர் டில்லர், 11 டிராக்டர் மற்றும் 14 ரோட்டா வேட்டர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான நிதி 12.25 லட்சம் ரூபாய் பெறப்பட்டுள்ளது. பயன்பெற விரும்பும் விவசாயிகள், சாதாரண வெள்ளை தாளில் பெயர், முகவரி, சர்வே எண், நிலத்தின் பரப்பு, சிட்டா, அடங்கல், வரைபடம் மற்றும் குடும்ப அட்டை மற்றும் தங்கள் விரும்பும் இயந்திரங்களை குறிப்பிட்டு செயற்பொறியாளர், இணை இயக்குனர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தர்மபுரி என்ற முகவரியிலும், உதவி செயற்பொடயாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தர்மபுரி என்ற முகவரிலும் விண்ணப்பிக்கலாம்.இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**காய்கறி சாகுபடி குறித்துவிவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 16,2010,00:54 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்ட உழவர் சந்தை விவசாயிகளுக்கு வேளாண்மை துறை சார்பில் குறுகிய கால காய்கறி சாகுபடி பயிற்சி நடந்தது.தர்மபுரி மாவட்டத்தில் கடந்த ஒரு மாதமாக பரவலாக தென்மேற்கு பருவ மழை பெய்து வருகிறது. பருவ மழைநீரை பயன்படுத்தி குறுகிய காலத்தில் காய்கறி உற்பத்தி செய்வது குறித்து மாவட்டம் முழுவதும் வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. தர்மபுரி மாவட்டத்தில் உள்ள 4 உழவர்சந்தைகளிலும் காய்கறி கொண்டு வரும் சுற்றுவட்டார கிராம விவசாயிகளுக்கு குறுகிய கால காய்கறி சாகுபடி குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.மாவட்ட வேளாண்மை துறை துணை இயக்குனர் நாகராஜன் தலைமை வகித்தார். வேளாண் அலுவலர் தாம்சன், துணை அலுவலர் இளங்கோ மற்றும் வேளாண் பணியாளர்கள் உழவர்சந்தைக்குட்பட்ட அதகப்பாடி, கடகத்தூர், செம்மாண்டகுப்பம், கிருஷ்ணாபுரம், செம்மனஅள்ளி உட்பட பல்வேறு கிராமங்களில் சென்று விவசாயிகளக்கு பருவ மழையை பயன்படுத்தி குறுகிய காலத்தில் சாகுபடி செய்து மகசூல் கிடைக்கும் காய்கறிகள் குறித்து உதவி அலுவலர்கள் பழனி, நரசிம்மன், ரங்கநாதன், காளியப்பன், சிவலிங்கம், நாகராஜ் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

**கொடிங்கால் வாய்க்கால் அடைப்புமழை நீரில் பயிர் மூழ்கும் அபாயம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 16,2010,01:16 IST

குளித்தலை: குளித்தலையில் திடீரென பெய்த மழையில் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். அதே சமயம், கொடிங்கால் வடிகால் வாய்க்கால் தூர்வாரப்படாமல் உள்ளதால் நிலத்தில் தண்ணீர் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.குளித்தலையில் தற்போது பெய்துள்ள மழையானது, இப்பகுதியில் பயிரிடப்பட்டுள்ள கரும்பு, வாழை, கோரை பயிருக்கு தற்போது பெய்த மழை பயனுள்ளதாக அமையும் என்று விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஆனால், குளித்தலை, லாலாப்பேட்டை, அய்யர்மலை பகுதியில் பெய்த மழை காரணமாக கொடிங்கால் வாய்க்கால் மூலம் வடிவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. மேட்டுமருதூர், குமாரமங்கலம் கொடிக்கால் வாய்க்கால் பாலம் வழியானது சிறிதாக உள்ளதுடன், தண்ணீரில் அடித்துவரப்படும் செடி கொடிகள் இங்கு சிக்குவதாலும் தண்ணீர் வடிவதில் இடையூறு ஏற்பட்டு, பக்கவாட்டில் உள்ள நிலத்தில் தேங்குகிறது.ராஜேந்திரம், மருதூர், வீரம்பூர் பகுதியில் உள்ள சாகுபடி நிலங்கள் பாதிக்கப்படும் அபாயத்தில் உள்ளது. கொடிங்கால் வாய்க்கால் தூர் வாரவும், பாலத்தில் ஏற்பட்டுள்ள அடைப்பை அகற்றவும் பொதுப்பணித்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**வெளிமார்க்கெட்டில் கொப்பரை விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 15,2010,23:52 IST

பொள்ளாச்சி: வெளிமார்க்கெட்டில் கொப்பரை விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால், விவசாயிகளும் கொப்பரை உற்பத்தியாளர்களும் மகிழ்ச்சியில் உள்ளனர்.
காங்கேயம் வெளிமார்க்கெட்டில் கடந்த 7ம் தேதி நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு 37 ரூபாய் விலை கிடைத்தது. தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின் 840 ரூபாய்க்கும், தேங்காய் பவுடர் கிலோ 60 ரூபாய்க்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டது.பறித்து உரிக்கப்பட்ட தேங்காய் டன்னுக்கு 10,200 ரூபாயும், காய்ந்த தேங்காய் டன்னுக்கு 11 ஆயிரம் ரூபாயும் காங்கேயம் டெலிவரி விலையாக இருந்தது. தோப்புகளில் பறித்து கொள்வதற்கு ஒரு தேங்காய்க்கு 5.20 ரூபாய் விலை கொடுக்கப்பட்டது. காய்ந்த தேங்காய் பறித்துக்கொள்ள 6.50 வரையிலும் விலை கொடுக்கப்படுகிறது.காங்கேயம் மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி, கொப்பரை கிலோ 39 ரூபாய்க்கு அதிகபட்சமாக விலை நிர்ணயம் செய்யப்பட்டது. தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு 855 ரூபாயும், தேங்காய் பவுடர் கிலோ 60 ரூபாய்க்கும் விற்கப்பட்டது.பறித்து உரிக்கப்பட்ட தேங்காய் டன்னுக்கு 10,750 ரூபாயும், காய்ந்த தேங்காய் டன்னுக்கு 11,500 ரூபாயும் காங்கேயம் டெலிவரி விலையாக இருந்தது. தோப்புகளில் பறித்துக்கொள்ள ஒரு தேங்காய்க்கு 5.50 விலை கொடுக்கப்பட்டது.கடந்த மூன்று வாரமாக தேங்காய், கொப்பரை

சார்ந்த பொருட்களின் விலை உயர்ந்து வருவதால் விவசாயிகளும், கொப்பரை உற்பத்தியாளர்களும் மகிழ்ச்சியில் உள்ளனர்.
கொப்பரை உற்பத்தியாளர்கள் சங்க நிர்வாகிகள் கூறியதாவது:ஜூலை இறுதியில் இருந்து கொப்பரை விலை உயர்ந்து வருகிறது. தேங்காய் சீசன் முடிந்து வரத்து குறைந்து வருவதால் வெளிமார்க்கெட்டில் கொப்பரை, தேங்காய் எண்ணெக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.ஓணம் பண்டிகையும், வடமாநிலங்களில் தொடர்ந்து பண்டிகைகளிலும் வருவதால் உணவு தேவைக்காக தேங்காய் அதிகளவில் தேவைப்படுகிறது. தனியார் எண்ணெய் நிறுவனங்கள் கொப்பரை கொள்முதல் விலையை உயர்த்தியுள்ளதால் மார்க்கெட் சூடுபிடித்துள்ளது.கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது கொப்பரை கிலோவுக்கு இரண்டு ரூபாயும், தேங்காய் எண்ணெய் கிலோவுக்கு ஒரு ரூபாயும் விலை உயர்ந்துள்ளது. இதனால், தேங்காய் விலையும் கணிசமாக உயர்ந்துள்ளது. தீபாவளி சீசன் முடியும் வரையிலும் விலை சரிய வாய்ப்பில்லை.அதனால், அரசு கொள்முதல் விலையை மேலும் உயர்த்தினால், வெளிமார்க்கெட்டிலும் விலை சரிவு ஏற்படாமல் இருக்கும். இவ்வாறு, கொப்பரை உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

**"மனு' நடைமுறையில் திராட்சை கொள்முதல் செய்ய தடை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 15,2010,21:21 IST

கம்பம்: "மனு' நடைமுறையில் திராட்சை கொள்முதல் செய்யாமல் கிலோ கணக்கில் விவசாயிகளிடம் கொள் முதல் செய்யவேண்டும் என கலெக்டர் முத்துவீரன் உத்தரவிட்டுள்ளார். காமயகவுண்டன்பட்டியில் நடந்த திராட்சை சாகுபடி கருத்தரங்கில் பங்கேற்ற கலெக்டர் முத்துவீரனிடம், விவசாயிகள், "திராட்சை விற்பனையில் இடைத்தரகர்கள் ஆதிக்கம் அதிகம் உள்ளது. விவசாயிகளிடம் இடைத்தரகர்கள் "மனு' நடைமுறையில் திராட்சை கொள்முதல் செய்கின்றனர். ஒரு மனு என்பது 12 கிலோ எடை உள்ளது. ஆனால் அவர்கள் வெளி மார்க்கெட்டில் எடை கணக்கில் விற்பனை செய்கின்றனர். விவசாயிகளிடம் ஒரு மனுவினை (12 கிலோ) 10 கிலோ என கணக்கிட்டு பணம் தருகின்றனர். இதனால் ஒவ்வொரு 10 கிலோவிற்கும் விவசாயிகளுக்கு இரண்டு கிலோ இழப்பு ஏற்படுகிறது.அதேபோல் பழம் வெட்டுவதற்கும் ஒரு நபருக்கு 300 ரூபாய் என கணக்கிட்டு கூலி வாங்குகின்றனர். ஆனால் பழம் வெட்டுபவர்களுக்கு 100 ரூபாய் மட்டுமே கொடுக் கின்றனர் என புகார் கூறினர். மனுநடைமுறைப்படி பழம் கொடுக்காத விவசாயிகளுக்கு வியாபாரிகள், பழம் வெட்டாமல் பாதிப்பை ஏற்படுத்துகின்றனர் என புகார் தெரிவித்தனர். உடனடியாக இன்று முதல் மனு அடிப்படையில் விவசாயிகளிடம் யாரும் பழம் கொள்முதல் செய்யக்கூடாது. கிலோ அடிப்படையில் மட்டுமே கொள்முதல் செய்ய

வேண்டும். மீறி செயல்படும் வியபாரிகள் குறித்து தாசில்தாரிடம் புகார் செய்யலாம். அந்த வியாபாரி மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்படும் என கலெக்டர் முத்துவீரன் உத்தரவிட்டார்.

**காபி விவசாயிகளின் கவனத்திற்கு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 15,2010,21:09 IST

தாண்டிக்குடி: காபி பயிருக்கான நடப்பாண்டின் மழைக் காப்பீட்டு திட்டம் இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. வடகிழக்கு பருவ மழை பெறும் தமிழக காபி விவசாயிகள் தங்களது காபி பயிர்களை பருவ மழைக் கான காப்பீட்டு திட்டத் தில் பதிவு செய்ய சம்மந்தபட்ட காபி வாரிய விரிவாக்க பிரிவு அலுவலகங் களை அணுக கேட்டுக் கொண்டும். பருவமழை காப்பீடு காலமாக அக்டோபர் 1 முதல் நவம்பர் 30, 2010 வரை கணக்கிடப்பட்டு, காப்பீடு செய்ய செப்டம் பர் 30 கடைசி தேதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 25 ஏக்கர் வரை காபி விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு காப் பீட்டு தொகையில் 50 சதவிகிதம் மான்யம் காபி வாரியம் வழங்கப்படவுள்ளது. மான்ய தொகை அதிகபட்சமாக ரூ.2 ஆயிரத்து 500 வரை அராபி காவிற்கும், ரூ.2 ஆயிரம் வரை ரோப ஸ்டா காபி தோட்டங்களுக்கு வழங் கப்படும். காபி விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்ந்து பயன டையுமாறு வத்தலக்குண்டு மற்றும் போடி காபி வாரிய விரிவாக்க முதுநிலை தொடர்பு அதிகாரிகள் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

**விவசாயிகள் கலந்தாய்வு கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 15,2010,21:08 IST

ஒட்டன்சத்திரம்: சின்னகுளிப்பட்டியில் பயிர்களை தாக்கும் மாவுபூச்சி மற்றும் அதனை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து ஆராய விவசாயிகள் பங்கேற்ற கலந்தாய்வு கூட்டம் நடந்தது. புலியூர்நத்தம், ஐவ்வாதுபட்டி, கேதையுறம்பு, சின்னகுளிப்பட்டி கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். மாவுப்பூச்சியின் தாக்குதல் மற்றும் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து ஒட்டன்சத்திரம் வேளாண்மை அலுவலர் பழனிச்சாமி மற்றும் துணை வேளாண்மை அலுவலர் ஜேம்ஸ் விளக்கமளித்தனர்.

**ஆடிப்பட்ட காய்கறி விதைப்புக்கு முன் விதை நேர்த்தி செய்வது ஏன்?**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 16,2010,00:33 IST

செய்துங்கநல்லூர்: - ஆடிப்பட்ட காய்கறி விதைப்புக்கு முன் விதை நேர்த்தி ஏன் செய்ய வேண்டும் என வேளாண் விஞ்ஞானி விளக்கம் அளித்துள்ளார்.காய்கறி விதைகளை விதைக்கும் முன்னர் விதைநேர்த்தி செய்வது அவசியம். குறிப்பாக தக்காளி, கத்தரி, மிளகாய் பயிரிட உள்ளவர்கள் விதை நேர்த்தி செய்வது அவசியமாகும். காய்கறி பயிர்களை வேரழுகல்நோய், வாடல் நோய், நாற்றழுகல் நோய், இலைப்புள்ளி நோய் என பல்வேறு நோய்கள் தாக்குகின்றன. அவை விதைகள் மூலமாகவும் பரவுகின்றன. பூசண வித்துக்கள் விதையின் மேல் மற்றும் உட்புறம் தங்கியிருக்கின்றன. விதை முளைக்கும்போது பூசண வித்துகளும் முளைத்து சாதகமான சூழ்நிலையில் நோயினை உண்டாக்கி சேதம் விளைவிக்கின்றன. இதனை தடுக்க காய்கறி விதைகளை விதைப்பதற்கு சற்று முன்னர் ஒரு கிலோ விதைக்கு பத்து கிராம் வீதம் சூடோமோனாஸ் ஃபுளூரசன்ஸ் என்ற உயிரியல் காரணி கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். விதை நேர்த்தி செய்வதால் நாற்றங்காலில் சாதகமான சூழ்நிலைகளில் தாக்கும் நாற்றழுகல் நோயினை தடுக்க இயலும். உங்களுக்காக சூடோமோனாஸ் ஃபுளூரசன்ஸ் என்ற உயிரியல் பூசணக்கொல்லி ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் விற்பனைக்குத் தயாராக உள்ளன.சூடோமோனாஸ் ஃபுளூ ரசன்ஸ் என்ற உயிரியல் பூசணக்கொல்லி ஒரு கிலோ விலை ரூபாய் எழுப்பத்தைந்து மட்டும். எனவே ஆடிப்பட்ட காய்கறி சாகுபடியாளர்கள் சூடோமோனாஸ் ஃபுளூரசன்ஸ் என்ற உயிரியல் பூசணக்கொல்லியினை பயன்படுத்துமாறு ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முருகேசன் தெரிவித்துள்ளார்.

**செம்மை நெல்சாகுபடி பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 16,2010,00:59 IST

கிருஷ்ணகிரி: வேப்பனப்பள்ளி யூனியன் பீமாண்ட பள்ளியில் வேளாண் துறை சார்பில், நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது.
வேளாண் இணை இயக்குனர் ராஜன் தலைமை வகித்து பயிற்சியை துவக்கி வைத்தார். வேப்பனப்பள்ளி வேளாண் உதவி இயக்குனர் எட்கர் கொன்சால்வஸ் முன்னிலை வகித்தார். பயிற்சியில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். செம்மை நெல் சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்தும் கோனோவீடர் களைக்கருவி பயன்படுத்துதல் மற்றும் இலை வண்ண அட்டையை பயன்படுத்தி தேவைக்கேற்ற மேலுரமிடல் குறித்து விவசாயிகளுக்கு

விளக்கிக் கூறப்பட்டது. மண் மாதிரி எடுக்கும் முறை, உயிர் உரங்களை பயன்படுத்தி விதை நேர்த்தி செய்யும் முறை குறித்து செயல்முறை பயிற்சி விளக்கம் தரப்பட்டது.வேளாண் அலுவலர் ராஜேந்தரன் நன்றி கூறினார்.

**வீட்டில் காய்கறி தோட்டம் அமைக்க விழிப்புணர்வு தேவை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 15,2010,23:32 IST

திருப்பூர்: வீட்டு காய்கறி தோட்டம் அமைக்க, இளைய தலைமுறையிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியம். இதற்கென வேளாண் அதிகாரிகள் சிறப்பு முகாம் நடத்த வேண்டும்.வேளாண் துறையில் செயற்கை முறை அதிகளவில் புகுந்து, இயற்கை வேளாண்மையை குறைத்து விட்டது. அரசு மற்றும் தனியார் மூலம் இயற்கை வேளாண்மை குறித்த விழிப் புணர்வு ஏற்படுத்தினாலும், அனை வருக்கும் அதற்கான விழிப் புணர்வு சென்றடைவதில்லை.

இயற்கையோடு இணைந்த விவசாயத்தின் மகிமையை அனைவரும் உணர, வீடுகளில் காய்கறி தோட்டம் அமைப்பது சிறந்தது. மறைந்து வரும் விவசாய தொழிலை பாதுகாக்கவும், உணவு பொருள் உற்பத்தியில் தற்சார்பு அடைய வீட்டு காய்கறி முறை உதவிகரமாக இருக்கும். மேலும், இளைய தலைமுறையிடம், விவசாயம் குறித்து விழிப்புணர்வு அதிகரிக்கவும் வழி ஏற்படும்.குடியிருப்பை சுற்றியுள்ள காலி இடங்களில் காய்கறி தோட்டம் ஏற்படுத்தலாம். வெங்காயம், வெண்டை, தக்காளி, கத்தரி, முருங்கை, கொத்தவரை, வாழை, பப்பாளி, எலுமிச்சை, நெல்லி, மாதுளை கறிவேப்பிலை போன்ற காய்கறி, பழங்களை பயிர் செய்ய முடியும். வீட்டின் சுற்றுப்புறம் அழகாகவும், சுத்தமாகவும் இருக்கும். வீட்டில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரும், துர்நாற்றத்தை உருவாக்காமல் பயனுள்ளதாக மாற்றப்படும். குடும்பத்தில் உள்ள குழந்தை முதல் ஆண், பெண் இருபாலரும் தோட்ட வேலைகளை செய்ய முடிகிறது. அனைவரும் விவசாய முறைகளை தெரிந்து கொள்தல், உடற்பயிற்சி, வீட்டுக்கு தேவை யான காய்கறி உடனடியாக பெறு தல் என பல நன்மை கிடைக்கிறது.

வீடுகளில் காய்கறி தோட்டம் ஏற்படுத்த, மானிய விலையில், தோட்டக்கலை துறை விதை, தேவையான தகவல் வழங்குகிறது. இந்தாண்டு திருப்பூர் மாவட்டம் முழுவதும் மானியத்தில் விதை பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன. வீட்டு தோட்டங்களை ஊக்கப்படுத்தும் வகையில், மானிய அளவை அதிகரிக்க வேண்டும். தோட்டக்கலை துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் இணைந்து செயல்பட வேண்டும்.வீட்டு காய்கறி தோட்டம் அமைப்பதில், மாவட்ட நிர்வாகம் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். பெண்கள் மற்றும் இளைய தலைமுறையினர் இடையே அதிக

விழிப்புணர்வு ஏற்படுத்துவது, நல்ல பலன் தரும். பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பணியிடங்களில் விழிப்புணர்வு முகாம் உருவாக்க வேண்டும்.

தோட்டக்கலை துறை அதிகாரி கூறுகையில், "வீட்டு காய்கறி தோட்டத்தை ஊக்குவிக்கும் வகையில், துறை சார்பில் 50 சதவீத மானிய விலையில் விதைகள் வழங்கப்படுகின்றன. விதை பொட்டலங்கள் 10 ரூபாய்; மானியத்துடன் ஐந்து ரூபாய்க்கு வழங்கப்படுகிறது. இந்தாண்டு மாவட்டம் முழுவதும் 2,000 பொட்டலங்கள் அளிக்கப்பட்டன. அடுத்த மானியம் கிடைக்கும் வரை, வீட்டு காய்கறி தோட்டம் அமைக்க முன் வருவோருக்கு தேவையான தகவல் வழங்கப்படும். விதைகள் கிடைக்கும் இடங்களும் கூறப்படும்,' என்றார்.

தினத் தந்தி

*சிறு விவசாயி... 1–ம் பக்க தொடர்ச்சி*

*விழா மேடையிலேயே தேர்தல் அறிக்கையில் தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தொடங்கினேன். 4 ஆண்டுகள் முடிவடைந்து, 5–வது ஆண்டு ஆட்சி நடைபெறும் இந்த வேளையில், இது வரை ஆற்றிய பணிகளில் சிலவற்றை மாத்திரம் சுட்டிக்காட்டிட விரும்புகிறேன்.*

*1 ரூபாய்க்கு 1 கிலோ அரிசி வழங்கும் திட்டம்; குறைந்த விலையில் பாமாயில், துவரம் பருப்பு, முதலிய பொருள்கள்; மானிய விலையில் 25 ரூபாய்க்கு 10 மளிகைச் சாமான்கள்; என்ற இத்திட்டங்களின் மூலம் தமிழகத்தில் அனைத்துத் தரப்பினருக்கும் உணவுப் பாதுகாப்பு உன்னதமான வகையில் உறுதி செய்யப்பட்டிருக்கிறது என்று உச்ச நீதி மன்றம் கூறியிருப்பதைச் சுட்டிக்காட்டி ஏடுகள் பாராட்டியிருக்கின்றன.*

*இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாத வகையில்; பட்டதாரிகளே இல்லாத குடும்பங்களிலிருந்து தொழிற்பட்டப் படிப்புகளில் இந்த ஆண்டு சேர்ந்துள்ள முதல் தலைமுறையைச் சேர்ந்த ஏறத்தாழ 70 ஆயிரம் இளைஞர்களுக்கு முதல்முறையாகக் கல்விக் கட்டணம் ரத்து; பள்ளிக் கல்வித் துறைக்கு தமிழக வரலாற்றிலேயே*

*முதல்முறையாக இந்த ஆண்டு 10 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு! அரசின் சார்பில் புதிதாக 5 அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகங்கள்; 6 மருத்துவக் கல்லூரிகள், 11 பொறியியல் கல்லூரிகள், 14 கலை அறிவியல் கல்லூரிகள் என உயர்கல்விக்கான வாய்ப்புகள் பெருமளவுக்கு உருவாக்கப்பட்டுள்ளன.*

*தமிழகம் முன்னணி மாநிலம்*

*கோவையில் 2010 ஜூன் மாதம் 23 முதல் 27–ந் தேதி வரை 5 நாட்களுக்கு தமிழக அரசின் சார்பில் மிகுந்த எழுச்சியோடும் ஏற்றத்தோடும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்தப்பட்டது. அதில் ஆயிரக்கணக்கான ஆய்வறிஞர்களும், லட்சோப லட்சம் தமிழ் மக்களும் கலந்து கொண்டு, தமிழ் மொழியின் ஆக்கத்துக்கும், மேம்பாட்டுக்கும் தேவையான பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டன.*

*அதுபோலவே, உலகப் புகழ் குவித்துள்ள மாமன்னர் ராஜராஜனின் தஞ்சை பெரிய கோவில் கட்டி முடிக்கப்பட்ட ஆயிரம் ஆண்டு நிறைவு விழாவினை செப்டம்பர் 25, 26–ந் தேதிகளில் மிகச் சிறப்புடன் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இஸ்லாமியர்க்கு 3.5 சதவீத இடஒதுக்கீடு; அருந்ததியர்க்கு 3 சதவீத உள் ஒதுக்கீடு வழங்கப்பட்டு, நலிந்த சமுதாயங்களைச் சேர்ந்த அவர்கள் உயர்கல்வியிலும், வேலை வாய்ப்புகளிலும் முன்னேற்றம் அடைந்து வருகின்றனர். இதுவரை, அரசுத் துறைகளில் 4 லட்சத்து 65 ஆயிரம் இளைஞர்கள் நிரந்தர வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். வருமுன் காப்போம் திட்டம்; இளம் சிறார் இருதயப் பாதுகாப்புத்திட்டம்; பள்ளிச்சிறார் இருதயப் பாதுகாப்புத்திட்டம்; பள்ளிச்சிறார் கண்ணொளித் திட்டம்; அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களும் 24 மணி நேரமும் இயங்கும் திட்டம்; அவசரகால மருத்துவ ஊர்தி 108 சேவைத் திட்டம்;*

*அரசு ஊழியர்க்கான புதிய காப்பீட்டு திட்டம்; உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்; போன்ற பல்வேறு மருத்துவ திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு, லட்சக்கணக்கான ஏழை எளியோர் தரமான மருத்துவ வசதிகளை இலவசமாகப் பெற்று வருவதால், பொது சுகாதாரம் பேணுவதில் தமிழகம் முன்னணி மாநிலமென அனைவராலும் பாராட்டப்பட்டு வருகிறது.*

*அன்னை தெரசா நூற்றாண்டு*

*ஏழை எளியோர், நோய்வாய்ப்பட்டோர், அனாதைகள் ஆகியோர் மீது அன்பும் பரிவும் கொண்டு அவர்களைப் பராமரிப்பதையே தமது வாழ்க்கை லட்சியமாகக் கொண்டு வாழ்ந்து, நோபல் பரிசு பெற்ற – மறைந்த அன்னை தெரசா பிறந்த நூற்றாண்டு 2010 ஆகஸ்ட் 26 அன்று தொடங்குவதையொட்டி தமிழக அரசின் சார்பில் அவரது நினைவைப் போற்றும் வகையில் சிறப்பாக அதனைக் கொண்டாடுவதென்று முடிவு*

செய்யப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் தேவைப்படும் இடங்களிலெல்லாம் பல்வேறு குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மக்களுக்கு குடிநீர் வசதிகள் மேம்படுத்தப்படுகின்றன. கழக அரசு பொறுப்பேற்ற பிறகு ராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தை 630 கோடி ரூபாய்ச் செலவில் நிறைவேற்றி முடித்திருக்கிறோம். தற்போது ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் 1,929 கோடி ரூபாய்ச் செலவில் வேகமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் வேலூர் கூட்டுக் குடிநீர் திட்டம் விரைவில் நிறைவேற்றப்படவுள்ளது. இவைகளைத் தொடர்ந்து 1,712 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மதுரை, கோவை, நாகை, விருதுநகர், சிவகங்கை, திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் ஐந்து கூட்டுக் குடிநீர் திட்டங்களையும், ஒரு குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தையும் நிறைவேற்றுவதற்கு நிர்வாக ஒப்புதலும் அளிக்கப்பட்டுள்ளது.

ரூ.14,600 கோடியில் மெட்ரோ ரெயில்

தமிழகமெங்கும் புதிய புதிய கட்டிடங்கள் – சாலைகள் – பாலங்கள் – மேம்பாலங்கள் எனப் பல்வேறு வகையிலும் கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன; குறிப்பாக சென்னை மாநகரில் 14,600 கோடி ரூபாய் செலவில் "மெட்ரோ–ரெயில்" திட்டம் வேகமாக நடைபெற்று வருகிறது.

ஏழை எளியோர் பயன் பெறுகின்ற மத்திய அரசின் திட்டமான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தைத் தமிழக அரசு மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி, இந்தியாவின் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. அதனால், தமிழகம் உச்சநீதிமன்றத்தின் பாராட்டுகளைப் பெற்றுள்ளது.

இத்திட்டத்தில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட 80 ரூபாய் தினக்கூலி, இந்த அரசு மேற்கொண்ட சீரிய முயற்சிகளின் பயனாக, 1.1.2010 முதல் 100 ரூபாயாக உயர்த்தி வழங்கிட, மத்திய அரசு முன்வந்துள்ளது என்பதையும் சுட்டிக்காட்டுவதோடு – அதற்காக மத்திய அரசுக்கு நன்றியும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவைபோன்ற பல்வேறு திட்டங்களின் வரிசையில் மேலும் ஒரு சில புதிய திட்டங்களைத் தொடங்குவது குறித்து, இந்தச் சுதந்திர தின விழாவில் குறிப்பிட விரும்புகிறேன்.

கான்கிரீட் வீடு திட்டத்துக்கான பணி ஆணை

குடிசை வீடுகளே தமிழகத்தில் இல்லை எனும் புதிய வரலாற்றைப் படைப்பதற்காக தமிழகத்தின் ஊராட்சிப் பகுதிகளிலுள்ள 21 லட்சம் குடிசை வீடுகளையும், தமிழ்நாடு அரசின் முழு நிதியுதவியுடன், 6 ஆண்டுகளில் கான்கிரீட் வீடுகளாக மாற்றும் "கலைஞர் வீடு வழங்கும் திட்டம்" எனும் புதிய – புரட்சிகரமான திட்டம் இந்த

ஆண்டு தொடங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், முதல் கட்டமாக நடப்பாண்டில் 3 லட்சம் குடிசைகளுக்குப் பதில், புதிய கான்கிரீட் வீடுகளைக் கட்டுவதற்காக, வீடு ஒன்றுக்கு 60 ஆயிரம் ரூபாய் வீதம், 1800 கோடி ரூபாயை தமிழக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. அதன்படி தெரிவு செய்யப்பட்டுள்ள 3 லட்சம் பயனாளிகளுக்கும் இன்று முதல் கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்கான "பணி ஆணைகள்" வழங்கப்படுகின்றன. இந்த திட்டத்தின் கீழ் கட்டப்படும் ஒவ்வொரு கான்கிரீட் வீட்டிற்காகவும் அரசின் சார்பில் 60 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுமென்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளபோதிலும்;

ரூ.15 ஆயிரம் அதிகரிப்பு

திருச்சி மாநகரில் நடைபெற்ற இதற்கான தொடக்க விழாவின் போது என்னிடம் தெரிவிக்கப்பட்ட கோரிக்கையினையேற்று, மேலும் 15 ஆயிரம் ரூபாய் கூடுதலாக்கி, ஒவ்வொரு வீட்டிற்கும் 75 ஆயிரம் ரூபாய் வீதம் மானியமாக வழங்கிட இந்த அரசு முடிவு செய்துள்ளது என்ற மகிழ்ச்சிகரமான அறிவிப்பையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓட்டைக் குடிசையிலே – ஒன்றரைச் சாண் பாயிலே – கொட்டும் மழையிலும், கொளுத்தும் வெயிலிலும் – வாடிக்கிடந்த மக்களுக்கு வாழ்வில் விடிவளிக்கும் இத்திட்டத்தை இன்று தொடங்கி வைப்பதில் உள்ளம் எல்லாம் இன்ப வெள்ளம் நிறைந்தது போன்ற உணர்வைப் பெறுகிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒருவர் வீதம், இங்கு வந்துள்ள 31 பேருக்கு, இன்று பணி ஆணைகள் வழங்கப்பட்டு; இந்த மகத்தான வீடு வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்படுகிறது என்ற செய்தியை தெரிவிப்பதில் நான் மெத்த மகிழ்ச்சியடைகிறேன்.

1 லட்சம் இளைஞர்களுக்கு பயிற்சி

எந்த மாநில அரசும் இதுவரை மேற்கொள்ளாத மிகப்பெரிய திட்டமாக – அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், கடந்த 4 ஆண்டுகளில் 10 ஆயிரத்து 104 கிராம ஊராட்சிகளில், 2 ஆயிரத்து 41 கோடி ரூபாய்ச் செலவில், அனைத்து அடிப்படை வசதிகளும் உருவாக்கப்பட்டுள்ளன,

ஐக்கிய நாடுகள் அமைப்பு இந்த ஆண்டினை "உலக இளைஞர்கள் ஆண்டு" என அறிவித்திருப்பதையொட்டி; வேலைவாய்ப்பில்லாத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெறுவதற்கேற்ற பயிற்சிகளைத் தீவிரப்படுத்தும் நோக்கத்துடன், புதிய திட்டம் ஒன்றும் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. 10–ம் வகுப்பு மற்றும் 12–ம் வகுப்பு படித்த இளைஞர்கள்–பொறியியல், இளங்கலை முதுகலைப் பட்டம் பெற்றுள்ள

இளைஞர்கள் ஆகியோருக்கு வேலை வாய்ப்புக்கான திறன்வளர்ப்புப் பயிற்சி இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும். பயிற்சி பெற்ற இளைஞர்கள் பல்வேறு தொழில் நிறுவனங்களில் உரிய வேலை வாய்ப்புகளைப் பெற இத்திட்டம் வழிவகுக்கும். நடப்பு ஆண்டில் ஒரு லட்சம் இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரவிருக்கும் இத்திட்டத்தைச் செயல்படுத்த முதற் கட்டமாக 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்வதற்கான அரசு ஆணை இந்நன்னாளில் வெளியிடப்படுகிறது.

சாலை சீரமைப்புக்கு ரூ.1000 கோடி

தமிழகத்தில் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில், கடந்த நான்காண்டுகளில் மட்டும் 3 ஆயிரத்து 465 கோடி ரூபாய் மதிப்பிலான சாலைப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும் சாலைகளை நேர்த்தியான முறையில் சீரமைத்திட, இந்த ஆண்டில் சிறப்பு நிதியாக 1000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய மின் மோட்டார்கள்

தமிழகம் முழுவதிலும் பயன்படுத்தப்பட்டுவரும் பல விவசாய பம்பு செட்டுகள், திறன் குறைந்தவையாக இருப்பதால், மின்சாரம் அதிகம் செலவாகிறது. இதுவும் மின் பற்றாக்குறைக்கு ஓரளவு காரணமாகும். இத்தகைய பம்பு செட்டுகளுக்கு பதில், திறன்மிக்க புதிய பம்பு செட்டுகளைப் பொருத்துவதன் மூலம், 20 சதவீத அளவுக்கு மின்சாரத்தைச் சேமித்திட முடியும்.

சிறு, குறு விவசாயிகளின் பம்பு செட்டுகளில் உள்ள பழைய மின் மோட்டார்களை நீக்கிவிட்டு, அவற்றிற்குப் பதிலாக, புதிய மின் மோட்டார்கள் அரசின் சார்பாக இலவசமாகப் பொருத்தித் தரப்படும். மற்ற விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்துடன், புதிய மோட்டார்கள் பொருத்தித் தரப்படும்.

கண்துஞ்சாமல், பசி நோக்காமல்...

இப்படி தமிழகம் வளம்பெற்று – மக்களின் வாழ்க்கைத் தரம் உயர – ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் மெய்வருத்தம் பாராமல் – கண் துஞ்சாமல் – பசிநோக்காமல் – சிலரால் அள்ளி வீசப்படும் அவதூறுக் கணைகளை அலட்சியப்படுத்தி; ஆக்கப்பூர்வமான பணிகளால், நமது தாய்த் தமிழகத்தின் புகழ் தரணியெங்கும் பரவி நிலைபெற வேண்டும் எனும் ஒரே நோக்கத்துடன்; “காலம் பொன் போன்றது; கடமை கண் போன்றது” எனும் முதுமொழிக்கொப்ப, ஒவ்வொரு நொடியும் தமிழக மக்களுக்குப் பயன் தரவேண்டும் எனும் எண்ணத்தோடு உழைத்துவரும் நிலையில்; உங்கள் அனைவருக்கும் மீண்டும் எனது சுதந்திர தின நல்வாழ்த்துகளை தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்–அமைச்சர் கருணாநிதி பேசினார்.

கலெக்டர்களுக்கு விருது

நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வுப் பணிகளுக்காக சிறப்பாக பணியாற்றிய தேனி மாவட்ட கலெக்டர் முத்துவீரன், தருமபுரி மாவட்ட கலெக்டர் அமுதா, கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் சண்முகம் ஆகியோருக்கு, முதல்–அமைச்சர் கருணாநிதி விருதுகளை அறிவித்தார். பின்னர் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியில் அவர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்படும்.

**கோவை மாவட்ட விவசாயிகள் பண்ணை கருவிகள் வாங்க ரூ.8 லட்சம் மானியம் வேளாண் துறை உதவி செயற்பொறியாளர் தகவல்**

அன்னூர்,ஆக.16–

கோவை மாவட்ட விவசாயிகள் பண்ணை குழு அமைத்து பண்ணை கருவிகள் வாங்க ரூ.8 லட்சம் வரை மானியம் வழங்கப்படும் என்று வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் கூறினார்.

செயல் விளக்கம்

கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் துறை தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் சார்பில் வேளாண் கருவிகள் குறித்த நேரடி செயல் விளக்க நிகழ்ச்சி அன்னூர் அருகே உள்ள குன்னத்தூர் கிராமத்தில் உள்ள முன்னோடி விவசாயி தோட்டத்தில் நடந்தது.

இந்த செயல்விளக்க நிகழ்ச்சியில் விவசாய பண்ணை கருவிகளில் பயிர் கதிரடிக்கும் எந்திரம். எந்திரம் மூலம் கதிரடிக்கும் கருவியுடன் மக்காச்சோளம் பிரித்து எடுக்கும் மற்றும் உறிஞ்சும் கருவி, களை எடுக்கும் கருவி, எந்திர சக்தி மூலம் இயக்கப்படும் தெளிப்பான்கள், நெல் நடவு செய்யும் எந்திரம், நெல் நாற்று தயாரிக்கும் எந்திரம், நெல் நாற்று நடும் தட்டு, பவர் டில்லர் மற்றும் இணைப்பு கருவி, சுழல் களப்பை, டிராக்டர் மற்றும் பவர் டில்லர் மூலம் இயங்கும் கதிர் அடிக்கும் எந்திரம், லேசர் மூலம் நிலத்தை சமன் படுத்தும் கருவி போன்ற எந்திரங்களின் நேரடி செயல் விளக்கம் விவசாயிகளுக்கு செய்து காண்பிக்கப்பட்டது.

அதன் பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் கோவை, ஈரோடு, திருப்பூர் மாவட்ட தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் சிவபிரகாசம்

கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

மானிய விலை

தமிழ்நாட்டில் 55 இடங்களில் வேளாண்மை பொறியியல் அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இந்த அலுவலகம் சார்பில் சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் விவசாய கருவிகள் 60 சதவீத மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் தங்களது பகுதியில் பண்ணை குழு அமைத்து பண்ணை கருவிகளை வாங்குவதற்கு ரூ.8 லட்சம் வரை மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

கோவை மாவட்டத்தை பொறுத்தவரை இது வரை சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு பண்ணை கருவிகள் வாங்குவதற்காக ரூ.1 கோடியே 20 லட்சம் வரை மானியம் வழங்கப்பட்டு உள்ளது. விவசாயம் செய்வதற்கு தேவையான ஆட்கள் கிடைப்பதில்லை. இதன் காரணமாக விவசாய பணிகள் அதிக அளவில் பாதிக்கப்பட்டு வருகிறது. விவசாயம் வளர்ச்சி அடையும் நோக்கிலும் விவசாயிகள் அதிக அளவில் பண்ணை கருவிகளை வாங்கவும் தமிழக அரசு மானியம் வழங்கி வருகிறது. விவசாயிகள் தங்களது தோட்டத்தில் 7.5 ஹெச்.பி முதல் 10 எச்.பி வரை பயன்படுத்தப்படும் மின் மோட்டார் பழைய மோட்டாராக இருந்தால் அதற்கு பதிலாக புதிய மின் மோட்டார் வாங்க ரூ.10 ஆயிரம் மானியமும், டிராக்டர் வாங்க ரூ.45 ஆயிரம் மானியமும் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் தங்களது தோட்டத்தில் லேசர் மிசின் மூலம் மண்ணை சமன்படுத்த லேசர் சேப்பிங் மிசின் இலவசமாக வழங்கப்படும்.

இவ்வாறு சிவபிரகாசம் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் கோவை மாவட்ட வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் சங்கரராமன், பாலகுரு மற்றும் முன்னோடி விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.